## 2024.07.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையில் பெண்களைப் பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல்

இலங்கையில் பொருளாதார செயற்பாடுகளில் பெண்களின் பங்கேற்பானது பல்வேறு காரணங்களால் ஏனைய பிராந்தியங்கள் மற்றும் ஆசிய நாடுகளை விடவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள இலங்கையின் தொழிற்படை தொடர்பான ஆய்வுக்கமைய, பொருளாதார ரீதியாக முனைப்பாகப் பங்கெடுக்கும் சனத்தொகையில் பெண்களின் சதவீதம் 35% ஆக அமைவதுடன், அதன்மூலம் பொருளாதாரச் செயன்முறையில் பங்கேற்பானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு ஏற்றத்தாழ்வைக் காட்டுகின்றது. நிதி தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சொத்துக்கள் அல்லது வேறு பிணைப் பொறுப்புக்கள் பெண்களிடம் இன்மை, நிதி வளங்களை அணுகுவதற்குள்ள வாய்ப்புக்கள் குறைவடைதல் போன்ற விடயங்கள் இலங்கையில் பெண் தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்கின்ற முக்கிய தடைகளாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், 2024.02.26 அன்று அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை மீண்டும் பலப்படுத்துவதற்காக கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 20 பில்லியன் ரூபாய்கள் நிதியொதுக்கீட்டில், 02 பில்லியன் ரூபாய்களைப் பயன்படுத்தி பெண்களைப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குள்ள தடைகளை நீக்குவதற்காக விசேட கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. மஹபாகே பொலிஸ் நிலையத்திற்கு காணித் துண்டொன்றை வழங்கல்

கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 08 இனை உள்ளடக்கி அண்ணளவாக 50,000 பேர் வசிக்கின்ற பிரதேசத்திற்கு சேவை வழங்குகின்ற மஹபாகே பொலிஸ் நிலையம் தற்போது கொழும்பு – நீர்கொழும்பு பிரதான வீதியை அண்டிய 21.5 பேர்ச்சர்ஸ் அளவிலான சிறிய காணியில் இயங்கி வருகின்றது. அதனால் மோட்டார் வாகனங்களைத் தரித்து வைப்பதற்குப் போதியளவு இடவசதியின்மை, வழக்குப் பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு பொருத்தமான இடவசதியின்மை, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிடவசதி மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வசதியின்மை போன்ற காரணங்களால் பொதுமக்களும் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதனால், குறித்த பொலிஸ் நிலையத்திற்குத் தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வத்தள பிரதேச செயலகம் முன்னர் அமைந்துள்ள காணியில் 40 பேர்ச்சர்ஸ் காணித்துண்டை ஒதுக்கி வழங்குவதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான சுவிட்சர்லாந்து இராஜாங்க செயலகத்திற்கும் இடையிலான உலகளாவிய துணி மற்றும் ஆடைக்கைத்தொழில் வேலைத்திட்டம் தொடர்பான கருத்திட்ட ஒப்பந்தம்

இலங்கையில் துணி மற்றும் ஆடைக்கைத்தொழில் துறைக்கான உலகளாவிய துணி மற்றும் ஆடைக்கைத்தொழில் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான சுவிட்சர்லாந்து இராஜாங்க செயலகம் மற்றும் இலங்கை

ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும் இடையில் கருத்திட்ட ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் டிஜிட்டல் மயப்படுத்தலை ஊக்குவித்து தரப்பண்பான பசுமை உற்பத்திகளுக்கு மாறுவதற்கான செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு துணி மற்றும் ஆடைக்கைத்தொழில் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு இயலுமை கிட்டியுள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கையில் பேண்தகு மற்றும் வினைத்திறனான இலத்திரனியல் வழிச்செலுத்தல் முறைமை (Electronic Navigation System) தொடர்பான கருத்திட்டம்**

பசுமை சுற்றாடல் நிதியத்தின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத்திட்டம் இலங்கையில் பேண்தகு மற்றும் வினைத்திறனான இலத்திரனியல் வழிச்செலுத்தல் முறைமை தொடர்பான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 1.09 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. கருத்திட்ட அமுலாக்கம் தொடர்பான திட்டத்திற்கமைய சுற்றாடல் அமைச்சானது தேசிய அந்தஸ்த்துடையதாக அடையாளங்காணப்பட்டுள்ளது. ஆனாலும், கருத்திட்ட விடயதானத்திற்கமைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்க் கொண்டு வரப்படுவதால், ஏற்புடைய அனைத்துத் தரப்பினர்களுடன் இணைந்து மிகவும் வினைத்திறனாகக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கான இயலுமை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் காணப்படுகின்றது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனமாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாற்றுவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. இசிப்பத்தன கல்லூரியின் விளையாட்டு செயற்பாடுகளுக்காக ஹென்றி பெட்ரிஸ் (Henry Pedris Ground ) விளையாட்டு மைதானத்தை ஒப்படைத்தல்**

பல்வேறு திறமைகளை வெளிப்படுத்துகின்ற பல விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ள இசிப்பத்தன கல்லூரிக்கு விளையாட்டுப் பயிற்சிகளுக்காக நிரந்தர விளையாட்டு மைதானம் இன்மையால், விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை விருத்தி செய்வதில் தடைகள் காணப்படுகின்றன. அதனால், கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான ஹென்றி பெட்ரிஸ் (Henry Pedris Ground ) விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரியின் விளையாட்டு செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்காக இருதரப்பினர்களுக்கிடையே ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த ஒப்பந்தத்தின் காலப்பகுதி 2017 ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளது. ஹென்றி பெட்ரிஸ் (Henry Pedris Ground ) விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்கு ஒப்படைப்பதன் மூலம் அதனை சரியான வகையில் மேம்படுத்திப் பேணிச் செல்வதுடன், அதன்மூலம் குறித்த கல்லூரி மற்றும் ஏனைய சுற்றியுள்ள பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் மற்றும் அப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது விளையாட்டுக்களுக்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது. அதற்கமைய, ஹென்றி பெட்ரிஸ் (Henry Pedris Ground ) விளையாட்டு மைதானத்தை அப்பெயரிலேயே பேணிக்கொண்டு, குறித்த விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்கு ஒப்படைப்பதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. கல்முனை நகரில் அமைந்துள்ள காணித்துண்டொன்றை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையகப்படுத்தல்

கல்முனை நகரமானது அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான சேவை வழங்கும் நிலையமாக அமைவதுடன், குறித்த பிரதேசம் நிர்வாக ரீதியாகவும், வணிகம் மற்றும் வர்த்தக கேந்திர நிலையமாகவும் கருதப்படுகின்றது. கல்முனை நகரசபை எல்லைக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கமைய, கல்முனை கடலோரப் பிரதேசம் உல்லாச மற்றும் பொழுதுபோக்குகளுக்குப் பொருத்தமான வலயமாகப் பெயரிடப்பட்டிருப்பினும், உல்லாச மற்றும் பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்கு நகரத்தில் போதியளவு வசதிகளின்மை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கல்முனை கடற்கரையோரப் பிரதேசத்தில் வாடிவீடு வீதியில் அமைந்துள்ள 01 றூட் 29.44 பேர்ச்சர்ஸ் கொண்ட காணித்துண்டொன்றை சுற்றுலா வசதி மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான கருத்திட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. உத்தரவாத மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கொள்வனவுக் கட்டணத்தைத் திருத்தம் செய்தல்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழும் குறித்த சட்டத்தில் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களுக்கமைய, 10 மெகாவாற்று அல்லது அதற்குக் குறைவான கொள்ளளவு கொண்ட மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்களுக்குரிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட, உத்தரவாதமளிக்கப்பட்ட சந்தை விலையை விடவும் உயர்ந்த விலைக் கட்டண (Feed in Tariff) முறையின் கீழ் உத்தரவாத மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கமைய, மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கொள்வனவின் போது மாறுபடுகின்ற கட்டண முறையை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.03.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், அபிவிருத்தியாளர்கள் ஒருசிலர் மாத்திரம் அதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளனர். அதனால், மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கட்டணத்தைக் கணிப்பீடு செய்வதற்கு விதந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, இலங்கை மின்சார சபை, இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக் கணிப்பீடு சமன்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கும், உத்தேசக் கட்டணத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. தேசிய தரநியம சபையை (National Quality Board) தாபித்தல்

2016 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய தரநியமக் கொள்கை (National Quality Policy), 2018-2022 தேசிய தரநியம உட்கட்டமைப்பு வசதிகள் மூலோபாயம் மற்றும் 2018-2022 இலங்கை தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தின் மூலம் தேசிய தரநியம சபையை உருவாக்க வேண்டிய தேவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது, தேசிய தரநியம நிறுவனம் மற்றும் ஏனைய தேசிய தரநியம ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர் நிறுவனங்கள் பல்வேறு நிரல் அமைச்சுக்களின் விடயதானங்களின் கீழ் சுயாதீன நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. அதனால், தேசிய தரநியம சபையை தாபிக்கின்ற முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்காக பங்காள நிரல் அமைச்சுக்கள் மற்றும் தேசிய தரநியம நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய செயற்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. இந்திய அரசால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 934 மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை நிர்மாணித்தல்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தூய்மையான குடிநீரை விநியோகிப்பதற்காக இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி குறித்த மாவட்டத்தில் 3,000 மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2016.10.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கபட்டுள்ளது. இக்கருத்திட்டம் 03 வருடகாலத்தில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பினும், மேலெழுந்துள்ள நிதி மற்றும் தொழிநுட்ப ரீதியான பிரச்சினைகளால் 2024 யூன் மாதம் வரைக்கும் கருத்திட்டக் காலத்தை நீடிப்பதற்கும், பெரோ சீமெந்துத் தாங்கிகளுக்குப் பதிலாக 1,831 பீவீசி மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பதற்கும் 2022.10.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள நிதியைப் பயன்படுத்தி 934 மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் அபிவிருத்திப் பணிகளுக்காக மேலதிக நிதியொதுக்கீடு வழங்கல்**

இளைஞர் மத்தியில் தாங்குதிறன், சுயமதிப்பு மற்றும் நோக்கங்கள் தொடர்பான உணர்வுகளை உருவாக்கல் மற்றும் வாழ்வில் ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும், வாய்ப்புக்களை உயரிய வகையில் பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களை அவர்களிடம் விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு, ஒரு மில்லியன் இளம் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல், தேசிய மற்றும் உலகளாவிய உழைப்புச் சந்தை தொடர்பாக வழிகாட்டல், பிரதேச செயலக மட்டத்தில் இளைஞர் முகாம்களை நடாத்துதல் மற்றும் தேசிய இளைஞர் சம்மேளனத்தை நடாத்துதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும், அதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வழங்குவதற்கும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2024.03.25 மற்றும் 2024.04.08 ஆம் திகதிகளில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களுக்கமைய, Codegen Innovation (Pvt) Ltd, Port City BPO (Pvt) Ltd, IVIVA PTE Ltd, Echelon Trade (Pvt) மற்றும் 99X Technologies போன்ற கம்பனிகள், மூலோபாய முக்கியத்துவம் கொண்ட இரண்டாம் நிலை வர்த்தகங்களாகப் பெயரிட்டு, குறித்த வர்த்தகங்களுக்கான உத்தேச விடுவிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்வரும் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 2378/35 இலக்க 2024.04.05 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.

- 2380/36 இலக்க 2024.04.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.
- 2380/33 இலக்க 2024.04.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.
- 2380/35 இலக்க 2024.04.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்
- 2380/34 இலக்க 2024.04.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்

**12. குற்றவியல் வழக்குக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

ஏதேனுமொரு குற்றவாளி அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்ட குற்றத்திற்காக குற்றவாளியாகத் தீர்ப்பளிப்பதற்கு முன்னர், குறித்த குற்றவாளி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியை அவருடைய தண்டனைக் காலத்தின் பகுதியாகக் கருதுவதற்கு நீதிபதிகளுக்கு இயலுமை கிட்டும் வகையிலான ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கோவை திருத்தச் சட்டம் 2024.05.31 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆயினும், குறித்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களுக்கு மேற்குறித்த திருத்தச் சட்டம் ஏற்புடையதற்றதாக இருப்பதால், அவர்கள் தொடர்பான குற்றத்தீர்ப்பளிக்கும் வரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியை கருத்தில் எடுப்பதற்காக பொறிமுறையொன்று தேவையெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, அவ்வாறான குற்றவாளிகளுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் அரசியலமைப்பின் 34 ஆவது உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விசேட ஏற்பாடுகள் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

ஓய்வூதியத்திற்கான உரித்தற்றவர்கள் தனியார் மற்றும் பகுதி அரச துறைகளில் பணிபுரிகின்ற ஊழியர்களின் சமூகப் பாதுகாப்புக்காக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. சமகால சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்புடைய வகையில் சட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், ஊழியர்களுக்கு தரப்பண்பானதும் வினைத்திறனானதுமான சேவையை வழங்குவதற்காக சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையைக் கட்டியெழுப்புவதற்காக நீடித்த மூலோபாயம்**

இலங்கையில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல், புதிய தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் பொருளாதார விருத்திக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் நேரடிப் பங்களிப்பு வழங்குகின்றனர். கடந்தகாலங்களில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார

நெருக்கடிகளால் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால், குறித்த தொழில் முயற்சியாளர்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக முதலீட்டு மற்றும் நடவடிக்கை மூலதன ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டிய தேவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு பல மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைகளில் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை மீண்டும் வலுவூட்டுவதற்கான கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக, 2024 ஆம் ஆண்டில் 40 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை கட்டியெழுப்பும் நோக்கில் 20 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான ஊக்குவிப்புக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2024.02.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிதியொதுக்கீட்டில் 02 பில்லியன் ரூபாய்களைப் பயன்படுத்தி, சுழற்சிக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், குறித்த கடன் திட்டத்தை 2024.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த தகவல்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

**15. வலுசக்தித் துறையில் மறுசீரமைப்பு மற்றும் நிதி நிலைபேற்றுத்தன்மை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியைப் பெற்றுக் கொள்ளல்**

வலுசக்தித் துறையில் மறுசீரமைப்பு மற்றும் நிதி நிலைபேற்றுத்தன்மை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டம் 03 உப நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொரு உப நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீதம் 300 மில்லியன் டொலர்கள் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார (தனியார்) கம்பனி போன்ற நிறுவனங்களின் நிறுவனக் கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை அமுல்படுத்துவதற்காக உத்தேச உப நிகழ்ச்சித்திட்டம் - 01 இற்கான நிதியிடலுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக் கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

16. **''புலம்பெயர் வசந்தம்'' நிகழ்ச்சித்திட்டம்**

2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக சட்டபூர்வமான முறையில் குறைந்தது மாதாந்தம் 500 மில்லியன் டொலர்களால் ஒத்துழைப்பு வழங்குமாறு புலம்பெயர் தொழிலாளர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். குறித்த வேண்டுகோள்களுக்கு புலம்பெயர் தொழிலாளர்கள் வழங்கிய நேர்மயப் பதிலளிப்புக்களின் அடிப்படையில் 2022 யூன் மாதம் தொடக்கம் 2024 மே மாதம் வரையான காலப்பகுதியில் தொழிலாளர்களின் பணஅனுப்பல்கள் 11 பில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. அதனால், நிதி மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளிக் போது புலம்பெயர் தொழிலாளர்கள் வழங்கிய அளப்பரிய ஒத்துழைப்புக்களைப் பாராட்டுமுகமாக ''புலம்பெயர் வசந்தம்'' எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**17. ஐக்கிய அமெரிக்காவுடன் கையொப்பமிட்ட ஒத்துழைப்பு உடன்படிக்கை இலக்கம் 383-128 இன் மூன்றாவது திருத்தம்**

''ஜனநாயக ரீதியான, சுபீட்சமான மற்றும் இடர்விளைவுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய திறன் கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்'' நிதியிடலுக்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசும் 2022.08.31 ஆம் திகதி ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றை மேற்கொண்டுள்ளதுடன், அதற்கமைய 9.069 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் குறித்த நிதிப்பெறுமதி 28.299 மில்லியன் டொலர்களாக 02 சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. குறித்த நிதியின் பெறுமதி 52.835 மில்லியன் டொலர்கள் வரைக்கும் மேலும் அதிகரிப்பதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை நிறுவனம் (USAID) இனால் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, ''ஜனநாயக ரீதியான, சுபீட்சமான மற்றும் இடர்விளைவுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய திறன் கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்'' இன் கீழ் நிதிவசதியை 52.835 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்து ஒத்துழைப்பு உடன்படிக்கை திருத்தம் செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**18. இலங்கையின் இளம் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் உழைப்புப் படையை உந்துவிப்பதற்காக ''வேலைக் கலாச்சாரம்'' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

இளைஞர்களிடையே உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரித்து இலங்கை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக திட்டமிடப்பட்டுள்ள ''வேலைக் கலாச்சாரம்'' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கருத்திட்ட யோசனையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் 2024 யூன் மாதம் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்மூலம் உற்பத்தித்திறன் விருத்தி செய்தல், தனிச்சிறப்புக்களை அடையாளங் காணல், இளைஞர்களை இணைத்துக் கொள்ளல், வேலைக் கலாச்சாரத்தை ஊக்குவித்தல், மற்றும் இலங்கை இளைஞர்கள் மத்தியில் செயலூக்கத்தைப் பேணுவதே நோக்கங்களாக அமைகின்றது. அதற்கமைய, இளைஞர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக இளம் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உழைப்புப் படையை ஊக்குவிக்கின்ற ''வேலைக் கலாச்சாரம்'' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**